# Lions Clubs International

District 324 A6 2012-2013



# RETENTION
# தக்கவைத்தல்

ஒன்றிணைந்து



செயல்படுவோம்

## PERFORMANCE RULES!
PERFORMANCE LEADS TO RESULTS



*பாசமிகு லயன் நண்பர்களே!*

உங்களுக்கு என் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள். உங்களுடைய சங்க அலுவல்கள் யாவையும் மிகுந்த ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் செய்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய இலக்குகளை விரைவாக செய்து முடிக்க திட்டங்கள் செயல்படுத்த திட்டமிட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

அதில் மிகவும் முக்கியமானது உறுப்பினர்களை எப்படி தக்க வைப்பது என்பது.

இந்த கையேட்டின் மூலம் அங்கத்தினர்களை எப்படி தக்கவைப்பது என்பதைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### ஏன் தக்க வைக்க வேண்டும்?

- ஒருசில வருடங்களுக்குமுன் இந்த தலைப்பில் எந்தவித விவாதமும் நடந்ததில்லை. அபபடி ஒரு முக்கியத்துவத்தையயும் அது பெற்றிருக்கவில்லை.
- இன்று என்ன ஏற்பட்டிருக்கிறது?
- நாம் ஏன் அதைப்பற்றி இவ்வளவு வெகுவாகக் கவலைப்படுகிறோம்
- உங்கள் சங்கத்தையே எடுத்துக்கொள்ளுங்களேன் நீங்கள் உங்கள் சங்கம் ஆரம்பித்த நாளிலிருந்து எத்தனை அங்கத்தினர்களைச் சேர்த்திருக்கிறீர்கள், எத்தனை அங்கத்தினர்களை நீக்கி இருக்கிறீர்கள் என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள்.
- அப்பொழுது ஏன் தக்க வைக்க வேண்டும் என்பது உங்களுக்கே புரியும்.

### உறுப்பினர்களை எப்படி தக்க வைப்பது?

- தக்க வைத்தல் என்பது உறுப்பினர்கள் எவரும் ராஜினாமா செய்யவே இல்லை என்று அர்த்தம். அதனால் உறுப்பினர்களின் விருப்பம் அறிந்து செயல்பட வேண்டும்.
- சங்கத்தை விட்டு வெளியே செல்லும் வழி நுழையும் வழியைவிட வெது அகலமாகிப் போய்விட்டது. வெளியே செல்லும் வழியை எவ்வளவு சிறியதாகச் செய்ய வேண்டுமோ அவ்வளவு சிறிதாக்க வேண்டும் அல்லது அதை முற்றிலும் அடைக்க வேண்டும்.



### சங்கங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை?

- உறுப்பினர்கள் ஈடுபாடு ஏன் குறைகிறது?
- குறைக்கும் அம்சங்கள் யாவை?
- தலைவர்கள் அவர்களின் ஈடுபாட்டை எப்படி வளர்க்க வேண்டும்?
- உங்கள் சங்கம் புதிய உறுப்பினர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறதா?
- உறுப்பினர்களின் கருத்துகளை சத்தமாக வெளியிட அனுமதிக்கிறீர்களா?
- சங்க உறுப்பினர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறீர்களா?
- சங்க கூட்டங்களுக்கு வருகை தரும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தொய்வு இருக்கிறதா? சரிசெய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?
- சங்கம் ஈடுபடும் சேவை திட்டங்களுக்கு பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதா?
- சங்க கூட்டங்களை வெகு நேரம் நடத்துவதால் உறுப்பினர்களுக்கு மணச்சோர்வு ஏற்படுகிறதா?
- சங்கத்துக்குள்ளேயே எழுந்துவிட்ட கோஷ்டி பூசல்கள் அதிகம் உள்ளதா?

போன்ற பல நிலைகளை சங்கங்கள் கூர்ந்து ஆராய்ந்து சரிசெய்ய வேண்டும்.

### விலகிச்சென்ற உறுப்பினர்களிடம் நடத்திய நேர்காணல்களின் மூலம் தெரியவந்தவை

- என்னால் ஒரு இதமான சூழலை அங்கு காணமுடியவில்லை.
- பழைய உறுப்பினர்கள் என்னை பொருட்படுத்துவதில்லை.
- நான் அங்கு வேண்டப்படவும் இல்லை அல்லது தேவைப்பட்டவனாகவும் கருதப்படவில்லை.
- ஒரு கூட்டமாக சேர்ந்து அவர்கள் செயல்படுவதில்லை.
- சங்கக் கூட்டமும் நடக்கும் இடமும் நேரமும் சௌகரியமாக இருக்கவில்லை.
- பெயர் சொல்லக் கூடிய அளவில் எந்த சேவை திட்டமும் இல்லை.
- குடும்பங்களின் ஈடுபாட்டை காணமுடியவில்லை.
- சிறந்த பேச்சாளர்கள் இல்லை.
- நல்ல சேவை திட்டங்களுக்கு அங்கீகாரம் இல்லை.
- நிதி நிலைமை சீராக இல்லை.



- உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு சரியான பதிலில்லை.
- புதுமையான யோசனைகளை யாரும் முன் வைக்கவில்லை.
- உண்மையான ஈடுபாடுமிக்க அங்கத்தினர்கள் குறைவு.
- எதற்கெடுத்தாலும் ஒரு விழா – பெரிய அளவில்
- மிகக் குறைவான அளவில் உறுப்பினர்கள் வருகை
- வயதளவில் பெரும் வித்தியாசங்கள் இருப்பதால் ஒன்றுப்பட்ட நிலையை அங்கு காண முடியவில்லை.
- எதற்கும் ஊக்கப்பட வைக்கும் சூழல் இல்லை.
- ஒருவருக்கொருவர் நலிந்த அளவில் தகவல்களைபரிமாறிக்கொள்கிறார்கள்.

### என்ன செய்யலாம்?

- சங்க உறுப்பினர்கள் பலவிதங்களில் ஊக்கமுடன் பணி செய்வதற்கான சூழல்களை ஏற்படுத்தலாம்.
- அடிக்கடி கருத்துக்களைக் கேட்டறிந்து அவர்களுடைய தனிப்பட்ட ஆற்றல்கள் அனுபவம் மற்றும் தனிச் சிறப்பு வாய்ந்த இலக்குகளைப் பற்றி கேட்டு அறிந்து அவர்களை சங்க வளர்ச்சிக்கு பயன் படுத்திக்கொள்ளலாம்.
- சங்க பொறுப்புகளை சுழற்சியாக ஒவ்வொருவரும் பெற்று பணிபுரியுமாறு ஏற்பாடு செய்யலாம். இதனால் குற்றங்கூறிக் கொண்டுஇருக்கும் மனப்பான்மை குறையும்.
- புதிய புதிய சவால்களை உறுப்பினர்கள் ஏற்று பணிபுரியுமாறு செய்யலாம் அல்லது புதிய சேவைக்கு ஊக்கமளிக்கலாம்.
- வெகு இலகுவாக புகழ்வார்த்தைகளை அல்லது பாராட்டுகளை சொல்லி ஊக்கப்படுத்தலாம். இது எல்லா அங்கத்தினர்களுக்கும் பொருந்தும் நன்றாகச் செய்து முடிக்கப்பட்ட ஒரு பணிக்கு இது ஒரு உந்துதலை கொண்டுவரும் அடிக்கடி சிறுசிறு வகையில் மறக்காமல் ஒரு சேவை பெற்றதற்காக் கூறப்படும் நன்றி அல்லது நன்றாகவே செய்து விட்டீர்கள் என்று புகழ்ந்து பாராட்டும் போது இவை எல்லாம் அபரிதமான ஊக்கத்தை கொடுக்கும்.
- தேவைப்படும் மாற்றங்களை உடனுக்குடன் அமல் செய்து உங்கள் நிர்வாக முடிவுகளை வெளிப்படுத்துங்கள்.

- புதிய கருத்துக்கள், புதிய பார்வைகள், கண்ணோட்டங்கள் போன்ற புதிய சிந்தனைகளோடு புதிய உறுப்பினர்கள் பொதுவான வாழ்க்கை அனுபவங்களை கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக புதிய செயல் வடிவங்களுக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் புதிய கருத்துக்களை நுழைய வைக்கிறார்கள். அதற்கு உதவி செய்யுங்கள்.
- தாங்கள் யாவரும் சங்க நடவடிக்கைகளில் முழுப்பங்கு ஏற்கிறோம் என்று அறிந்தவுடன், அவர்கள் முழு இசைவோடும் பங்கு கொள்ள் ஆரம்பிப்பார்கள்.

## தக்க வைக்கும் முயற்சிக்கு முடிவு காணுங்கள்

- தக்க வைக்கும் முயற்சி என்பது ஒரு கூட்டுச் செயல்பாடு ஆகும். தக்க வைக்கும் முயற்ச்சிகளுக்கான கூட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துங்கள். அதை சங்க பொறுப்பாளர்களுக்கும், குழுத்தலைவர்களுக்கும், உணர்த்துங்கள் உறுப்பினர்களை முழுமையாக சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்.
- மாவட்ட அளவிலும், கூட்டு மாவட்ட அளவிலும் செயல்படும் **MERL** குழுக்கள் மற்றும் இதே சேவையைச் செய்யும் இதரக் குழுக்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிக அவசியம்.

மொத்ததில் இந்த ஆண்டை உறுப்பினர்கள் "தக்க வைத்தல்" ஆண்டாக கொண்டாடுவோம்.

உறுப்பினர் தக்க வைத்தல் அவசியம் பற்றியும் அதற்கான காரணங்களையும், நான் அறிந்த வரையில் தந்திருக்கிறேன்.

மேலும், கடந்த 8 ஆண்டுகளுக்கான புள்ளி விபரங்களை தொகுத்து உங்கள் பார்வைக்கு சமர்ப்பித்திருக்கிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் 8686 உறுப்பினர்களை சேர்த்தும், 5391 உறுப்பினர்களை இழந்தும் இருக்கின்றோம். இதன் மூலம் தக்கவைத்தலின் அவசியம் பற்றி நாம் உனர்ந்தால், செயல்பட்டால் உறுப்பினர்களின் வெளியேற்றத்தை மிகுதியான அளவு நம்மால் குறைக்க முடியும் என்கிற நம்பிக்கையோடு செயல்படுவோம்.

| Year | Opening Balance | Addition | Drop | Closing Balance |
|---|---|---|---|---|
| 2004-05 | 1428 | 390 | 622 | 1196 |
| 2005-06 | 1196 | 655 | 244 | 1607 |
| 2006-07 | 1607 | 752 | 447 | 1912 |
| 2007-08 | 1912 | 1546 | 452 | 3006 |
| 2008-09 | 3006 | 943 | 807 | 3142 |
| 2009-10 | 3142 | 1054 | 949 | 3247 |
| 2010-11 | 3247 | 1890 | 765 | 4372 |
| 2011-12 | 4372 | 1456 | 1105 | 4723 |
| **TOTAL** | | **8686** | **5391** | |

மாவட்டத் தலைவர்-தக்கவைத்தல் பொறுப்பினை எனக்களித்த **மாவட்ட ஆளுனர் லயன் ஆர்.பொன்ராஜ் அசோக்** அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பயணங்கள் முடிவதில்லை**

My dear Club Officers

***Cordial Greetings !***

I had been planning to write you ever since I was assigned with the responsibility of Club Success position by our District Governor Ponraj Ashok for the fiscal year in the run, but I waited for some time to speak to you as the installation process were on during the last 100 days where in I personally witnessed huge membership induction carried out by each and every Club in our District, which shows the amount of dedication, involvement and more so the fine follow-up right from the Head Table executives to the Club Officers.

In any organization which offers services, the bottom line figure is profit. While profit can be measured in commercial value as far as the business is concerned, in a Service Organization the profit can be realized through recruitment of Membership.

Whereas once the profit is realized, the utmost requirements that profits are to be maintained every time to make us grow the way we want to grow in this Organization.

I have been in this organization for the last 15 years and this Organization gave me so much and I am able to learn new things and unlearn which is undesired. Every Leader I worked with, a moment of joy for me that made to stay connected with this Organization and I am still learning the areas which are most important, resourceful.

Learning is a cycle. In the process you may get a good teacher sometimes and many times you will have to live with what is available. You must have the determination to excel. You must have a strong will power to understand and appreciate various circumstances. You must judge on your own. You can depend on knowledge not on your growth in the Organization.

**Many depend on the Organization. But few, the Organization is depending on them. I want you to be the member of the few.**

Stay connected with Association growth and development. Be a Contributing Member to the Community Welfare thru Association's structured leadership skill program.

**You are the Lion ; the Association ever wants you.**

**Subasri Balu**
District Chairperson
**Club Success Program**






*Best Wishes From*

*A Distinguished Leader*

MJF Lion **P Puthukkan** M.A. B.L.
DCP - Orientation